## #1 குடியேறினோர் பாதுகாப்பாக உதவியை நாடலாம்

அதிபர் பைடன் தேசியப் பாதுகாக்கப்பட்ட இடங்கள் கொள்கையை விரிவுபடுத்தியுள்ளார். இது, பேரிடர் உதவி வழங்கப்படும் இடங்களில் அல்லது அந்த இடங்களுக்கு அருகில் இருக்கும் மக்களைக் குடியேற்ற வலியுறுத்தல் முகவர்கள் கைது செய்யவோ மிரட்டவோ கூடாது என்று தெரிவிக்கிறது: **நெருக்கடி நேர எதிர்வினைப் பாதுகாப்பு இடங்கள், சேவை மையங்கள், வெளியேற்ற வழிகளில் அமைந்துள்ள இடங்கள் (எடுத்துக்காட்டாக, சாலையோரச் சரிபார்த்தல் மையங்கள்) அல்லது குடும்பங்களை மீண்டும் இணைத்தல் நடைபெறும் இடங்கள்**

*மேலும் **பாதுகாக்கப்பட்ட இடங்களுக்கு**, பக்கம் 2ஐப் பார்க்கவும்

## #2 பேரிடர் உதவிக்கு எல்லாரும் தகுதி பெறுகிறார்கள்.

உதவிக்கான தகுதி, பேரிடர் தொடர்பான தேவைகளை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது, குடியேற்ற நிலை அல்லது வருவாயை அடிப்படையாகக் கொண்டு அமைவதில்லை. உடனடி, ரொக்கப் பணம் இல்லாத நெருக்கடி நேர உதவிக்கு எல்லாரும் தகுதி பெறுவார்கள். கூடுதலான காலகட்டத்தைக் கொண்ட சில அரசுத் திட்டங்களுக்கான தகுதிக்கு, வீட்டில் குறைந்தபட்சம் ஒரு குடிமகன் அல்லது தகுதியுள்ள குடியேறியவர் இருக்கவேண்டும் என்ற தேவை இருக்கலாம். அனைத்து குடியேறியவர்களும் செஞ்சிலுவைச் சங்கம் அல்லது பிற இலாப நோக்கற்ற மற்றும் நம்பிக்கை அடிப்படையிலான நிறுவனங்களிடமிருந்து தங்களுக்குத் தேவையான உதவியைக் கேட்பதற்கு பாதுகாப்பாக உணர வேண்டும்.

CA மாநிலச் சட்டம் (SB 2327) பேரிடர் உதவிப் பணியாளர்கள் தேவையில்லாத ஆவணங்களைக் கோருவது அல்லது ஒரு தனி நபருடைய குடியேற்ற நிலையைப்பற்றிக் கேள்விகளைக் கேட்பதைத் தடை செய்துள்ளது. தனிப்பட்ட ஆவணங்கள் இல்லாததால் யாருக்கும் நெருக்கடி நேர உதவியை மறுக்கக்கூடாது. ஏனெனில், அந்த ஆவணங்கள் பேரழிவின்போது தொலைந்துபோயிருக்கலாம் அல்லது அழிக்கப்பட்டிருக்கலாம்.

## #3 பேரிடர் உதவியைப் பெறுவது உங்கள் குடியேற்ற நிலையைப் பாதிக்காது

பேரிடர் உதவியைப் பெற்றால் தங்கள் குடியேற்ற நிலை பாதிக்கப்படலாம் என்று குடியேறியவர்கள் கவலை கொள்ளலாம். இது உண்மை இல்லை. பொது ஆற்றல் விதிமுறை (டிசம்பர், 22) ஒரு நபர் பச்சை அட்டைக்கு விண்ணப்பம் செய்யும்போது, பேரிடர் உதவியானது ஒரு பொது ஆற்றல் பரிசோதனையில் கருத்தில் கொள்ளப்படாது என்று உறுதிப்படுத்துகிறது. இந்தப் பொது ஆற்றல் பயன்படுத்தப் பாதுகாப்பானவை பட்டியலில் (பக்கம் 2**ஐக் காண்க) பேரிடருடன் தொடர்பில்லாத, எப்போதும் கருத்தில் கொள்ளப்படாத நன்மைகள் மற்றும் சேவைகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக, உணவு, மருத்துவப் பராமரிப்பு, காப்பீடு, குழந்தைகளுக்கான திட்டங்கள், மதச் செயல்பாடுகள், கல்வி, இன்னும் பல.

**பேரிடர் நேர உதவி இலவசமாக வழுங்கப்படுகிறது, அதைத் திரும்பச் செலுத்தவேண்டியதில்லை.**

## #4 எல்லோருக்கும் உரிமைகள் உள்ளன : கவலைகளைப்பற்றிப் புகார் செய்யுங்கள்

நெருக்கடி நேரத் தகவல் மற்றும் உதவியைத் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு மொழியிலும், மற்றும் அணுகக்கூடிய ஓர் இடத்திலும் பெறுகிற உரிமை எல்லோருக்கும் உண்டு. குரல் கொடுப்பவர்களும் சேவை வழங்குநர்களும் குடியேறினோர் உரிமைகள் தொடர்பாகத் தெரிந்துகொள்ளவேண்டும், தங்கள் சமூகங்களுக்கும் தெரியப்படுத்தவேண்டும், இதைப் பேரிடர் வருமுன் செய்யவேண்டும். அவர்கள் அணுகலுக்கான தடைகளை அடையாளம் காணவும் சரி செய்யவும் உதவலாம். அதன்பிறகு, மக்கள் வெற்றிகரமாக உதவிக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான துல்லியமான தகவல்களும் தேவைப்படும் ஆதரவும் அவர்களுக்குக் கிடைப்பதை இவர்கள் உறுதிசெய்யலாம்.

### வளங்களுக்கான இணைப்புகள்

- சான் ஃபிரான்சிஸ்கோ விரிகு பகுதியில் இலவச மற்றும் குறைந்த செலவுச் சட்ட அறிவுறுத்தல் சேவைகள்
- கலிஃபோர்னிய அதிவிரைவு எதிர்வினை வலைப்பின்னல்கள் தொகுப்பு பாதுகாக்கப்பட்ட இடங்களைச்சுற்றி நடைபெறும் ICE செயல்பாடுகளைப்பற்றிப் புகார் செய்ய - குடியேறினோர் நீதிக்கான CA கூட்டுப்பணி
- பல மொழிகளில் நில நடுக்கப் பாதுகாப்புத் தகவல் - CADRE இணையத் தளம்
- உள்ளூர், மாநில மற்றும் தேசிய வளங்கள் மற்றும் தகவல்களுக்கான இணைப்புகள் - Immigrantinfo.org
- **பொது ஆற்றல் பயன்படுத்தப் பாதுகாப்பானவை பட்டியல் (மே, 21) ஆங்கிலம் ஸ்பானிய மொழி
- ஆவணப்படுத்தப்படாத குடியேறியோருக்கு FEMA அரசுப் பேரிடர் உதவி (ஆங்கிலம்) 10/9/20

### *மற்ற பாதுகாக்கப்பட்ட பகுதிகள்:

பேரிடர் அல்லது நெருக்கடி எதிர்வினை மற்றும் உதவிச் செயல்பாடுகளுடன், “பாதுகாக்கப்பட்ட பகுதிகளில்" இவையும் உண்டு:

- பள்ளி செல்வதற்கு முந்தைய கல்வி நிலையம், தொடக்க அல்லது மேல்நிலைப் பள்ளி, தொழில் சார்ந்த அல்லது வணிகப் பள்ளி, அல்லது கல்லூரி அல்லது பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிலையங்கள்.

- “தேவை உள்ள மக்களுக்குத் தேவையான" சமூக சேவைகளை வழங்கும் இடங்கள்: உணவு வங்கிகள், இல்ல வன்முறைப் பாதுகாப்பகங்கள், மாற்றுத் திறனாளிகளுக்குச் சேவை புரியும் இடங்கள்.

- குழந்தைகள் ஒன்றாகத் திரளும் இடங்கள், குழந்தைப் பராமரிப்பு மையங்கள், பள்ளிக்குப் பிந்தைய நிகழ்ச்சிகள், வளர்ப்புப் பராமரிப்பு இடம், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள்.

- மருத்துவச் சிகிச்சை வசதிகள்: மருத்துவமனைகள், மருத்துவருடைய அலுவலகங்கள், COVID-19 தடுப்பு ஊசி போடுதல் மற்றும் பரிசோதித்தல் இடங்கள், மன நல வழங்குநர்கள், சமூக நல மையங்கள், அவசரப் பராமரிப்பு மையங்கள், கர்ப்பமாக உள்ளோருக்குச் சேவை செய்யும் இடங்கள்.

- அணிவகுப்பு, நிகழ்த்துதல் அல்லது பேரணி நடைபெற்றுவருகிற ஓர் இடம்.

- வழிபாடு அல்லது மத ஆய்வுக்கான இடங்கள், நம்பிக்கைச் செயல்பாடுகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள தாற்காலிகக் கட்டுமானங்கள் உள்பட.

- இறுதிச் சடங்கு, கல்லறைச் சடங்கு, ரோசரி, திருமணம் அல்லது பிற மத அல்லது குடிமையியல் நிகழ்ச்சிகள் அல்லது நிகழ்த்தப்படுதல்கள் நடக்கிற ஓர் இடம்.

## குடிமக்கள் அல்லாதோருக்கு அரசு உதவிபற்றிய FEMA கையேடு

- ஆவணப்படுத்தப்படாத குடியேறியோருக்கு அரசுப் பேரிடர் உதவி (ஆங்கிலம்) 10/9/20
- ஆவணப்படுத்தப்படாத குடியேறியோருக்கு அரசுப் பேரிடர் உதவி (சீன மொழி) 10/10/20
- ஆவணப்படுத்தப்படாத குடியேறியோருக்கு அரசுப் பேரிடர் உதவி (ஜெர்மன் மொழி) 12/20/21
- ஆவணப்படுத்தப்படாத குடியேறியோருக்கு அரசுப் பேரிடர் உதவி (ஹைத்தியன் கிரெயோலெ)
- ஆவணப்படுத்தப்படாத குடியேறியோருக்கு அரசுப் பேரிடர் உதவி (இந்தி) 1/20/22
- ஆவணப்படுத்தப்படாத குடியேறியோருக்கு அரசுப் பேரிடர் உதவி (ஜப்பானிய மொழி) 10/20/20
- ஆவணப்படுத்தப்படாத குடியேறியோருக்கு அரசுப் பேரிடர் உதவி (க்மெர்) 10/26/21
- ஆவணப்படுத்தப்படாத குடியேறியோருக்கு அரசுப் பேரிடர் உதவி (கிருண்டி)
- ஆவணப்படுத்தப்படாத குடியேறியோருக்கு அரசுப் பேரிடர் உதவி (கொரிய மொழி) 10/10/20
- ஆவணப்படுத்தப்படாத குடியேறியோருக்கு அரசுப் பேரிடர் உதவி (போர்ச்சுக்கீசிய மொழி)
- ஆவணப்படுத்தப்படாத குடியேறியோருக்கு அரசுப் பேரிடர் உதவி (செர்போ குரோஷிய போஸ்னிய மொழி) 12/20/21
- ஆவணப்படுத்தப்படாத குடியேறியோருக்கு அரசுப் பேரிடர் உதவி (ஸ்பானிய மொழி) 10/9/20
- ஆவணப்படுத்தப்படாத குடியேறியோருக்கு அரசுப் பேரிடர் உதவி (சுவஹிலி)
- ஆவணப்படுத்தப்படாத குடியேறியோருக்கு அரசுப் பேரிடர் உதவி (டகாலோக்)
- ஆவணப்படுத்தப்படாத குடியேறியோருக்கு அரசுப் பேரிடர் உதவி (வியட்நாமிய மொழி)